# உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.

## SC No : 332/2022

| | |
|---|---|
| பெயர் | .. சபாபதி(அசா5) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 15 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் கார்த்திகா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
15.10.2025

**எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் தாழையூத்து காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றும்போது 22.09.2021 தேதியில் நிலைய சிறப்பு உதவிஆய்வாளர் ராமசாமி என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்தபோது இரவு 9.30 மணிக்கு வழக்கின் வாதி சந்துரு நிலையம் ஆஜர் ஆகிகொடுத்த புகார்மனுவை பெற்று அதன்தன்மை படி நிலையகுற்றஎண்.838/2021 பிரிவுகள் 341,294 பி,323,506(2) இதசபடி பதிவுசெய்யப்பட்ட வழக்குகோப்பை எனக்கு முன்பாக முதல்விசாரணையாக உதவிஆய்வாளர் திரு.சுகுமார் அவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவஇடத்திற்கு அன்றையதினம் இரவு 11.30 மணிக்கு சென்று சாட்சிகள் சின்னராஜா, பிரபு ஆகியோர் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அசாஆ.2.** பார்வை மகஜர் **அசாஆ.3.** மாதிரிவரைபடம் **அசாஆ.4.**அந்த பார்வைமகஜர் அறிக்கையில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். அதன்பின்னர் சாட்சிகள் சந்துரு, ரமேஷ், கரண், கபிஷ், சின்னராஜா, பிரபு, மாணிக்கம், சங்கர், சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசாமி ஆகியோர்களை

விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப அன்றையதினமே வழக்கின் சட்டப்பிரிவுகளில் ஏற்கனவே இருந்த சட்டப்பிரிவுகளோடு கூடுதலாக இதச பிரிவு 307 ஐ சேர்த்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை சம்பந்தபட்ட கோவில்பட்டி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அசாஆ.5.** 23.09.2021 தேதி காலை 9 மணிக்கு வழக்கின் எதிரிகளில் மதன்ராஜ் என்பவரை கைதுசெய்து காவல்நிலையத்திற்கு அழைத்துவந்து காலை 10 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் மாணிக்கம், சங்கர் ஆகியோர் முன்னிலையில் எந்தவித வற்புறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்து மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 வது எதிரி மதன்ராஜ் என்பவர் பெத்தேல் அருகே மறைத்துவைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய மூங்கில் கம்பை எடுத்து ஆஜர் செய்ததில் அத்தாட்சியில் கைப்பற்றி 1 ம்எதிரியை வழிக்காவல்துணையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பியும் கைப்பற்றப்பட்ட மூங்கில் கம்பை படிவம் 91 தயார்செய்து பிரிவு 307 இதச கூடுதலாக சேர்க்கப்பட்டதன் அடிப்படையில் வழக்குகோப்பை ஆய்வாளராகிய எனக்கு மேல்விசாரணைக்கு அனுப்பிவைத்தார். 1 வது எதிரி மதன்ராஜ் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ.6**. அத்தாட்சி ஆவணம் **அசாஆ.7.** படிவம் 91 **அசா.ஆ.8.** கைப்பற்றப்பட்ட மூங்கில் கம்பு **சாபொ.1.** பின்னர் நான் வழக்குகோப்பை பெற்றுக்கொண்டு 27.10.2021 தேதி வழக்கின் சம்பவஇடத்தை நேரில் பார்வையிட்டு ஏற்கனவே முந்தைய விசாரணை அதிகாரி தயார்செய்த பார்வைமகஜர், மாதிரிவரைபடத்தில் எந்த மாறுதலும் இல்லை என்ற காரணத்தால் நான் புதிதாக எந்தஒரு பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார்செய்யவில்லை. மேலும் ஏற்கனவே முந்தைய விசாரணை அதிகாரி விசாரித்த சாட்சிகளான மேற்சொன்ன 1 முதல் 9 சாட்சிகளில் 1 முதல் 4 வரை சாட்சிகள் முதல்விசாரணை அதிகாரியிடம் கூறிய சங்கதிகளை விட கூடுதலாக மாறுபட்டு புதிய சங்கதிகளை எனது விசாரணையில் கூறியதன் அடிப்படையில் அவர்களை மட்டும் மறுவிசாரணை செய்து புதிய வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினம் வழக்கின் சொத்தை நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அன்றைய தினமே புதியதாக சாட்சி புவனேஷ்வர்

என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.10.2021 தேதியில் வழக்கில் காயம்பட்ட சாட்சிக்கு மருத்துவசிகிச்சை கொடுத்த மருத்துவர் சீனிவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்று பெற்றேன். அவர் அந்தகாயம் சாதாரண காயம் என சான்று வழங்கினார். விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அசாஆ.9.** பின்பு வழக்கில் 2,3 எதிரிகள் மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்ற கிளையில் முன்ஜாமீன் உத்தரவு பெற்று பிணையில் சென்றுவிட்டார்கள். 09.11.2021 ம்தேதியில் வழக்கின் விசாரணையை முடித்துக்கொண்டு 1,3 வது எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341,294 பி,323,506(2) இதசபடியும் 2 ம்எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341,294 பி,323,506(2),307 இதசபடியும் குற்றஇறுதி அறிக்கை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்னமாதிரி சொன்னதேதியில் முதல்விசாரணை அதிகாரி சம்பவஇடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரிவரைபடம் தயார்செய்ததாக கூறுவதும், சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்ததாக கூறுவதும் உண்மை இல்லை என்றால் சரியல்ல. 1 வது எதிரியை கைதுசெய்ததாக கூறுவதும் சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் தயார்செய்ததாகவும் அதன்அடிப்படையில் சான்றுபொருள் கைப்பற்றப்பட்டதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் வழக்குகோப்பை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவஇடம் சென்றதாக கூறுவதும் சாட்சிகளை மறுவிசாரணை செய்ததாக கூறுவதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்தவழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.